பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 18 | வியாழக்கிழமை | 05.10.2023 | அதிர்வு 65

## உயர்தரப் பரீட்சை ஜனவரி 4 ஆரம்பம்

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையில் உயர் தரப் பரீட்சையை 02▶

# நெருக்கடி நிலைமையில் எம் நாடு; இணைந்து பணியாற்ற வாருங்கள்

## நாடாளுமன்றில் வைத்து எதிரணிக்கு ஜனாதிபதி ரணில் மீண்டும் அழைப்பு



“எமது நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றது. நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் அரசுடன் இணைந்து பணியாற்ற முன்வாருங்கள்.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார். 02▶

# நீதியான தீர்வு வழங்கினால் ஒத்துழைக்க நாங்கள் தயார்

## சபையில் சிறீதரன் எடுத்துரைப்பு



“சர்வதேசத்திடம் கையேந்தும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டாம் நிலை என்ற எண்ணம் தோன்றவில்லையா? உள்ளக விசாரணையில் நீதி கிடைக்காத காரணத்தால்தான் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். வங்குரோத்துக்கு மத்தியிலும் இனவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான தீர்வை வழங்கினால் சர்வதேசத்தில் சாதிக்கும் ஈழத்தமிழர்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள்.” 05▶

# கட்சி அரசியலைப் புறந்தள்ளிவிட்டு தமிழின இருப்புக்காகச் சேருவோம்

## யாழில் நடந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு சுரேஷ் நன்றி தெரிவிப்பு

“எமது தொடர்ச்சியான போராட்டங்களே எமக்கான நீதியையும் நியாயத்தையும் எமது வாழ்வுரிமையையும் நிலைநாட்ட வழிவகுக்கும் என்பதை உணர்ந்து கட்சி அரசியலைப் புறந்தள்ளி எத்தகைய முரண்பாடுகளையும் ஒதுக்கி வைத்து, எமது இனத்தின் இருப்புக்காக அனைவரும் தொடர்ந்து இணைந்து செயற்பட அறைகூவல் விடுக்கின்றோம்.”

– இவ்வாறு ஜனநாயக 02▶



# இணையப் பாதுகாப்புச் சட்டமூலத்துக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்ப்பு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம்

“நிகழ்நிலை குற்றங்களைக் கையாள்வதற்கான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்பதாக, ஏற்கனவே உள்ள குற்றவியல் சட்டத்தை உரியவாறு பொருள்கோடல் செய்வதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் ஏதுவான வகையில் சட்ட அமுலாக்கத் தரப்பினரின் கட்டமைப்பு

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

ரீதியான இயலுமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய கட்டமைப்பு 06▶




‘எடுத்தேன், கவிழ்த்தேன்’ என்ற அவசரகதியில் சில வேலைகளைச் செய்ய முற்பட்டால் விளைவு மோசமாகத்தான் இருக்கும்.

மனித சங்கிலிப் போராட்டம் என்பது ஓர் உயர்ந்த போராட்ட வடிவம். நேற்று அதைப் போட்டடித்து விட்டார்கள் என்பதுதான் என் கணிப்பீடு.

நேர்மையாக செயல்பட்ட முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தப்பட்டார், அதனால் அவர் நாட்டை விட்டு ஓட 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வேண்டிய நிலைமை வந்தது என்பவை எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும்.

நீதிபதி விடயத்தில் உண்மையில் என்ன நடந்தது, நீதிபதி எங்கே, அவர் கூறியவை என்று தெரிவித்து அநாமேதய அடிப்படையில் ஊடகங்களில் வெளியான ஒரே மாதிரியான ஒரு செய்தியைத் தவிர, மேலதிக விவரங்கள் எதுவும் இல்லை என்ற பின்னணியில், இவ்விடயத்தில் மக்களுக்கு ஒரு குழப்பம் இருந்தது – இருக்கின்றது – என்பது உண்மை.

உயிரச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாகப் பதவி விலகுகிறேன் என்ற நீதிபதியின் ஒரு பரா ராஜினாமாக் கடிதத்தைத் தவிர, வேறு உத்தரவாதப்படுத்தப்பட்ட தகவல் ஏதும் இல்லை.

உண்மை நிலைமையை உறுதியாக மக்களுக்கு எடுத்துரைக்கக் கூடிய பாங்கில் ஊடகங்களும் இருக்கவில்லை, அரசியல் தலைவர்களும் இருக்கவில்லை. அதனால் இவ்விடயத்தை ஒட்டி மக்களுக்கு ஒரு மயக்கம் இருந்தது – இருக்கின்றது – என்பது கவனிக்கப்பட வேண்டும்.

இந்தப் பின்புலத்தில், மக்களைத் தெளிவுபடுத்தாமல், இந்தப் போராட்டத்திற்கு மக்கள் திரண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்ததே ஒரு வகையில் தவறுதான்.

'Too many cooks spoil the soup' என்ற மாதிரி பலரின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் போராட்டம் அதனால்தான் குழம்பியதோ என்னவோ...! அவர் ஆள்களை ஒழுங்குபடுத்திக் கூட்டி வருவார் என்று இவரும், இவர் கூட்டி வருவார் என்று அவரும் மாறி மாறி நினைத்து, கடைசியில் பொறுப்பு எல்லோர் மீதும் இருந்தும், அதை ஒருவருமே சுமக்காமல் போய்விட்டனரோ என்றும் எண்ணத் தோன்றியது.

ஆக, வழமையான போராட்டத்திற்குத் தலை காட்டும் பிரமுகர்களும் அவர்களின் ஒரு சில ஆதரவாளர்களும் மட்டுமே வந்திருந்தனர்.

காலை 9 மணிக்கு யாழ். சத்திரத்துச் சந்தியிலிருந்து மருதனார்மடம் வரைச் சென்று திரும்பினேன். ஆங்காங்கே நான்கு, ஐந்து முக்கிய சந்ததிகளில் தலா நூறு பேர் வரை என்ற அளவில் தான் கூட்டம் இருந்தது. முல்லைத்தீவு, கிளிநொச்சியிலிருந்து முக்கிய ஆர்வலர்கள் வருகை தந்திருந்தனர். கொக்குவிலில் செந்திவேலின் மார்க்ஸிய, லெனினிஸக் கட்சியினர், சட்டத்தரணிகள் என்று ஒரு குழுமம் வந்து கூடி, எண்ணிக்கையைக் கூட்டியது.

பாதை நெடுக மனித சங்கிலியாக நிற்க ஆள்கள் இல்லாதமையால், கிடைத்த ஆள்களைக் கூட்டிக்கொண்டு மருதனார் மடத்திலிருந்து ஊர்வலமாக நாச்சிமார் கோவிலடி வரை வந்தமை தான் நேற்று உருப்படியாக நடைபெற்ற விடயம்.

மனிதச் சங்கிலி என்ற ஒரு போராட்ட வடிவம் குழம்பிப் போய்விட்ட ஆதங்கத்துடன் அலுவலகம் திரும்பி தொலைக்காட்சியைப் போட்டேன்.

வழமையாகவே 'போராட்டம் வெடிக்கும்! போராட்டம் வெடிக்கும்!' – என்று சூளுரைக்கும் தலைவர் 'மக்கள் திரண்டு வந்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள்' – என்று முழங்கிக் கொண்டிருந்தார்.

வந்த கோபத்தில் தொலைக்காட்சி நிறுவனத்தின் உயர்மட்ட பிரமுகர் ஒருவருக்கு அழைப்பு எடுத்தேன். நான் சீற முன்னரே அவருக்கு விடயம் விளங்கி விட்டது.

"எங்கள் படப் பிடிப்புக் குழு அங்கு வந்திருக்கும் கூட்டத்தை அப்படியே படம் பிடித்து காட்டிக்கொண்டு தான் அவரின் பேட்டியை லைவ்வில் ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றது. ஆகவே எல்லாம் மக்களுக்கு அப்பட்டமாகத் தெரியும்" – என்று சமாதானம் சொன்னார் அவர்.

உண்மைதான். நம் மக்களுக்கு எல்லாம் தெரியும். அமைதியாக உரிய சமயத்தில், உரிய முறையில் அவர்கள் பதில் அளிப்பார்கள். அவர்களின் பதில் தான் நமது அரசியல்வாதிகளுக்குப் பல சமயங்களில் விளங்குவதில்லை. அல்லது அவர்கள் மக்களின் பதிலை விளங்காத மாதிரி நடிப்பார்கள்.

மக்களினால் நிராகரிக்கப்பட்ட ஒரு தலைவர் அண்மையில் கூட ஒரு வெளிநாட்டு ராஜதந்திரியைச் சந்தித்த போது, புதிதாக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய ஒரு முக்கிய பதவிக்கு தான்தான் நிற்க வேண்டும் என்று மக்கள் கேட்கின்றார்கள் எனக் கயிறு விட்டிருக்கிறார்.

நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்பை புறம் ஒதுக்கி – அது புரியாத மாதிரி – இன்னும் மக்கள் என்னைத்தான் அந்தப் பதவிக்கு வர வற்புறுத்துகிறார்கள் என்று அத்தலைவர் பேசுவது மக்களைமேலும்மேலும்முட்டாள்களாக்க முனையும் எத்தனம்தான். ஆனால், அது சரிப்பட்டு வரப்போவதில்லை. கடைசியில் இப்போது போல தாங்கள்தான் முட்டாள்களாவார்கள் என்பதை இத்தலைவர்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியது...!

ஸ்ரீதரன் எம்.பிக்கும் எனக்குமான இணக்கம் – இறுக்கம் – பற்றி ஒரு விடயம் இன்று குறிப்பிடுவேன் என நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அதை நாளை பார்ப்போமா நண்பர்களே...?

## கட்சி அரசியலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுரேஷ். க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலைக் கண்டித்தும் இலங்கைத் தமிழர்களுக்கு உள்நாட்டு சட்டங்களுக்கமைய நீதி கிடைக்காது என்பதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டுவதற்கும் இலங்கையில் மீண்டும் ஒரு இன அழிப்பு நடக்கக்கூடாது என்பதை வலியுறுத்தியும் நேற்றுக் காலை 9.00 மணி தொடக்கம் 11.30 மணிவரை மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரை நடைபெற்ற மாபெரும் மனிதச் சங்கிலி போராட்டத்தில் எமது குறுகிய கால அழைப்பை ஏற்றுக் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

நேற்றைய போராட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களும் பல்வேறுபட்ட தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தொண்டர்களும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் கலந்துகொண்டனர்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் குருந்தூர்மலை சைவத் தமிழர்களுக்குச் சொந்தமானது என்று வழக்காடிய உறவுகளும் கலந்துகொண்டனர் என்பதுடன் அவர்கள் நீதிபதிக்கு எத்தகைய அழுத்தங்கள் இருந்தன என்பதையும் தெளிவாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்த கருத்துக்கள் சர்வதேச சமூகத்தின் செவிகளுக்குச் சென்றிருக்கும் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். இருக்கின்ற குறுகிய ஜனநாயக இடைவெளியைப் பயன்படுத்தி தமிழ்த் தேசிய இனத்திற்கு இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நீதி கிடைக்காது என்பதை நாம் தொடர்ந்தும் சர்வதேச சமூகத்திற்கு வலியுறுத்த வேண்டிய அவசியம் தமிழர் தரப்புக்கு இருக்கின்றது. தமிழ் கட்சிகள் ஒன்றுகூடி அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய இருக்கின்றோம்.

எமது தொடர்ச்சியான போராட்டங்களே எமக்கான நீதியையும் நியாயத்தையும் எமது வாழ்வுரிமையையும் நிலைநாட்ட வழிவகுக்கும் என்பதை உணர்ந்து கட்சி அரசியலைப் புறந்தள்ளி எத்தகைய முரண்பாடுகளையும் ஒதுக்கிவைத்து, எமது இனத்தின் இருப்புக்காக அனைவரும் தொடர்ந்து இணைந்து செயற்பட அறைகூவல் விடுக்கின்றோம்.

மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்ட சகலருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## நெருக்கடி நிலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்திருந்த ஜனாதிபதி, சபையில் விசேட கூற்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"நான் சரியென்று இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் கூறுகின்றனர். அப்படியென்றால் இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் ஒன்றாக இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். ஏன் எங்களுக்கு இணைந்து செயற்பட முடியாது?.

அத்துடன், நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றது. இந்த நேரத்தில் இரண்டு தரப்பினரும் ஒன்றிணைந்தே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் எங்கள் அனைவருக்கும் ஒரே அச்சுறுத்தலே உள்ளது. அதில் இருந்து மீள்வதற்கு வேறு வேலைத்திட்டங்கள் இருக்குமாக இருந்தால் அதனைக் கூறுங்கள். ஆனால், யாரும் வேலைத்திட்டங்களை முன்வைக்கவில்லை.

தற்போதைய கொள்கைத்திட்டங்களை இரண்டு தரப்பிலும் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்வதால் இரண்டு தரப்பினரும் ஒன்றாக வேலை செய்து நாட்டுக்குக் காட்டுவோம்." – என்றார்.

## உயர்தரப் பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்தப் பரீட்சை இந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்படவிருந்த நிலையில், மாணவர்களின் நன்மை கருதி பிற்போடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கைக்கு தங்கப் பதக்கம்



19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை வீராங்கனை தருஷி கருணாரத்ன தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

தருஷி கருணாரத்ன 2.3 நிமிடங்களில் போட்டித் தூரத்தைக் கடந்துள்ளார்.

ஆசிய விளையாட்டு போட்டிகளில் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை தங்கப் பதக்கம் பெற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை இந்தியாவும், வெண்கலப் பதக்கத்தை சீனாவும் பெற்றன.

2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை தங்கப் பதக்கம் வென்ற முதலாவது சந்தர்ப்பமாகவும் நேற்றைய வெற்றி பதிவாகியுள்ளது.

19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் சீனாவில் இடம்பெற்று வருகின்றன

# ரயில் சேவைகள் இரத்து பயணிகள் அசௌகரியம்

நாட்டில் நேற்று மாலை அனைத்து அலுவலக ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் ஆரம்பித்த திடீர் பணிப்பகிஷ்கரிப்பே இதற்கான காரணம் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அதிகாரியொருவர் உப ரயில் கட்டுப்பாட்டாளர் மீது நேற்று காலை தாக்குதல் நடத்தியமையால் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

இதன் காரணமாக அனைத்து ரயில்வே பராமரிப்புப் பிரிவுகளில் இருந்தும் ரயில்கள் வெளியேறுகின்றமை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், ரயில் சேவைகள் தாமதமடைந்தன என்றும், சில ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன என்றும் ரயில்வே திணைக்களம் கூறியுள்ளது.

ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதால் பயணிகள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

இதனிடையே, கொழும்பு – கோட்டை ரயில் நிலையப் பாதுகாப்புக்காகப் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# வெளிநாடுகளில் மிருகங்களுக்குக் கூடப் பயன்படாத கதிர்வீச்சு இயந்திரமே இங்கு புற்றுநோயாளர்களுக்கு

## சபையில் சஜித் பகிரங்கக் குற்றச்சாட்டு

“இலங்கையில் புற்றுநோயாளர்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் கோபோல்ட் கதிர்வீச்சு வெளிநாடுகளில் மிருகங்களுக்குக் கூடப் பயன்படுத்துவதில்லை. அதனால் காலாவதியான இயந்திரங்களுக்குப் பதிலாக லினியா கதிர்வீச்சு இயந்திரத்தைப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவிசேடகூற்றொன்றைமுன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வருடாந்தம் 30 ஆயிரம் புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அவர்களுக்குக் கதிர்வீச்சு சிகிச்சை அளிப்பது செலவு குறைந்த முறையாகும்.

லினியா எக்ஸலேட்டர் என்ற கதிர்வீச்சையே பயன்படுத்த வேண்டும். அதுவே தற்போதுள்ள நவீன உபகரணம். ஆனால், எமது நாட்டில் கோபோல்ட் கதிர்வீச்சே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், இந்தக் கதிர்வீச்சை வெளிநாடுகளில் மிருகங்களின் புற்றுநோய்க்குக் கூட பயன்படுத்துவதில்லை.

அத்துடன், லினியா எக்ஸலேட்டர் கதிர்வீச்சு உபகரணம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி மற்றும் கராப்பிட்டிய ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனை பதுளை, இரத்தினபுரி, குருநாகல், அனுராதபுரம், அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், இரண்டாம் கட்டமாக இந்த உபகரணங்களை வழங்குவதற்கு 20 இலட்சம் டொலர்கள் செலவாகும் என்று



சுகாதார அமைச்சின் சில அதிகாரிகள் கோபோல்ட் கதிர்வீச்சு சாதனங்களைத் தொடர்ந்தும் பயன்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

இதன் விளைவாக, ஒரு லினியா கதிர்வீச்சு இயந்திரத்தின் விலையில் பாதி செலவிடப்பட்டு, காலாவதியான, வெளிநாடுகளில் விலங்குகளுக்குக் கூடப் பயன்படுத்தாத இயந்திரங்களை இறக்குமதி செய்யத் தயாராகியுள்ளனர். இந்தக் காலாவதியான இயந்திரங்களுக்குப் பதிலாக லினியா கதிர்வீச்சு இயந்திரத்தைப் பயன்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன், இந்தியாவில் இருந்து பெனசியா என்ற கதிர்வீச்சு இயந்திரம் இறக்குமதி செய்யப்படவுள்ளது. எனினும், இந்தக் கதிர்வீச்சு இயந்திரம் இந்தியாவில் கூடப் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.” – என்றார்.

# வகுப்பறைக்குள் விளையாடிய மாணவன் மின் விசிறிபட்டு பலி

## புஸல்லாவையில் சோகம்



வகுப்பறைக்குள் இடம்பெற்ற திடீர் விபத்தில் காயமடைந்த மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் புஸல்லாவையில் இடம்பெற்றுள்ளது .

புஸல்லாவை இந்து தேசிய கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் டெல்டா வடக்கு பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த ராஜரட்னம் சதுர்சன் (வயது 15) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி பாடசாலை மைதானத்தில் நேற்று சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வு முடிவடைந்த பின்னர் பிற்பகல் 1.30 மணியளவில் வகுப்பறைக்குத் திரும்பிய குறித்த மாணவன், மேசை மீது ஏறிப் பாய்ந்து விளையாடியுள்ளார்.

இதன்போது வகுப்பறையில் இயங்கிக்கொண்டிருந்த மின் விசிறியில் அவரின் தலைப் பகுதி பட்டு காயம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து மாணவன் வகுவப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் கம்பளை வைத்தியசாலைக்கு அவர் அனுப்பப்பட்டார்.

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிக இரத்தப்போக்கே மரணத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் புஸல்லாவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆசிய விளையாட்டுப் போட்டிகள்;

# மகளிருக்கான அஞ்சலோட்டத்தில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம்

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மகளிருக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் 3 நிமிடம் 30. 8 விநாடிகளில் திறமையை வெளிப்படுத்திய இலங்கை அணி வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கியது.

நதீஷா ராமநாயக்க, ஜயேஷி உத்தரா, சயுரி மென்டிஸ் மற்றும் தருஷி கருணாரத்ன ஆகியோர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

போட்டியில் தங்கப் பதக்கத்தை பஹ்ரேனும், வெள்ளிப் பதக்கத்தை இந்தியாவும் சுவீகரித்தன.

இதனிடையே, ஆடவருக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை அணி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.

3 நிமிடம் 2.5 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்த இலங்கை அணியை அருண தர்ஷன, கௌஷிக கேஷான், ராஜித ராஜகருணா, காலிங்க குமாரகே ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

# லொறி உள்ளிட்ட தொழிற்துறைசார் வாகனங்களின் இறக்குமதித் தடைகள் தொடர்பில் விசேட அவதானம்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

"நேர்மறையான பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதே அரசின் இலக்காகும். அதன் அடிப்படையில் லொறிகள், பஸ்கள் மற்றும் தொழிற்துறைசார் வாகனங்களின் இறக்குமதித் தடைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது."

– இவ்வாறு வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொருளாதாரத்தை ஸ்திரமடையச் செய்யும் இலக்குடன் நாம் செயற்பட்டு வருகின்ற நிலையில், சில பொருட்களுக்கு இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ளமையால் அதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

இதனால் சர்வதேசத்துடனான வர்த்தக நடவடிக்கைகளிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. இது தேசிய உற்பத்தியாளர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது.

ஏற்றுமதி உற்பத்திக்கான மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாவிட்டால், ஏற்றுமதி வருமானமும் பாதிக்கப்படும். இதனை அடிப்படையாகக் கொண்டு வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பொருட்களுக்குமான இறக்குமதித்தடைகளை தளர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய வாகன இறக்குமதி விவகாரத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் கடந்த இரு அமைச்சரவைக் கூட்டங்களிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

அதாவது எந்தவகையான வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

லொறி, பஸ், தொழிற்துறைக்குத் தேவையான வாகனங்கள் உள்ளிட்டவற்றின் இறக்குமதி தொடர்பான கொள்கையை மாற்றுவது குறித்து அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்பட்டது.



இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக 2024 இல் 1.8 – 1.9 நேர்மறை பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கின்றோம். கொள்கை ரீதியிலான பொருளாதார வளர்ச்சியின் ஊடாக தற்போது தாங்கிக்கொள்ள முடியாத நிலைமையிலுள்ள வாழ்வாதார சுமையைக் குறைக்க வேண்டும் என்பதே அரசின் இலக்காகும்." – என்றார்.

# சர்வதேச விசாரணை நிராகரிப்பு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும்

## சபையில் வைத்து ரணிலுக்கு மரிக்கார் எச்சரிக்கை

"சர்வதேச விசாரணையை ஒருபோதும் ஏற்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்ஷவைப் போல் கருத்துரைத்தது எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது மரிக்கார் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:–

"அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளுக்காக ஆளும் தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் புகழ்பாடுகின்றார்கள்.

ஜனாதிபதிக்கும் எமக்கும் தனிப்பட்ட ரீதியில் எவ்வித முரண்பாடும் கிடையாது. ஆனால், கொள்கை ரீதியில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

அரசுக்கு எதிராக நாட்டு மக்களின் எதிர்ப்பு வலுவடைந்துள்ளது. மக்களின் போராட்டத்தைத் தடுப்பதற்காக தற்போது நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இளைஞர், யுவதிகளுக்கு வை–பை இலவசமாக வழங்குவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது சமூக ஊடகங்களை முடக்குவதற்காகச் சட்டம் கொண்டு வர முயற்சிப்பது கவலைக்குரியது.

ஜேர்மனிய ஊடகத்துக்கு ஜனாதிபதி வழங்கிய நேர்காணல் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகின்றது. நேர்காணலில் ஜனாதிபதி குறிப்பிட்ட விடயங்களைக் கொண்டு ஆளும் தரப்பினர் உற்சாகமடைந்துள்ளார்கள். நேர்காணலின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் போல் கருத்துரைத்தார்.

ஜனநாயகத்தை முடக்கி, சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் கடந்த ஆண்டு லி குவான்யூ , மாத்தீர் மொஹமட் ஆகியோர் என்று குறிப்பிட்டுக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைக் களமிறக்கி, நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளினார்கள்.

மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து ராஜபக்ஷக்கள் தலைமறைவாகி உயிரைப் பாதுகாத்துக் கொண்டார்கள். அடுத்த ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் களமிறக்கி மீண்டும் பாடம் படித்துக்கொள்ளப் போகின்றார்கள்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள



பிரச்சினைகளை அரசு உணர்வுபூர்மாக ஆராய்வதில்லை. எண்ணம் போல் விலையேற்றத்தை இலக்காகக் கொண்டுள்ளது. மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது. மீண்டும் மின்கட்டணம் அதிகரித்தால் தெற்காசியாவில் அதிக மின்கட்டணம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தைப் பிடிக்கும்.

தற்போதைய மின் கட்டண அதிகரிப்பால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது எந்தளவுக்கு நியாயமானது? தற்போது கிடைக்கும் வருமானத்தில் மக்களால் எவ்வாறு வாழ முடியும்? மக்களின் பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்தாமல் அரசு தன்னிச்சையாகச் செயற்பட்டால் பாரிய எதிர்விளைவுகளை அரசு எதிர்கொள்ள நேரிடும்." – என்றார்.

---

## நீதியான தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"சட்டமா அதிபர் உட்பட உயர் அதிகாரிகளின் அழுத்தங்களால் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தனது குடும்பத்தாரின் பாதுகாப்புக் கருதி பதவியை இராஜிநாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன.

சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் இடமளிப்பதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகத்துக்கு மிடுக்காக குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது.

உள்ளக விசாரணையில் சரியான மற்றும் நியாயமான நீதி கிடைக்காத காரணத்தால்தான் சர்வதேச விசாரணையை தொடர்ந்து கோருகின்றோம் என்பதை ஜனாதிபதி விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஜேர்மனிய நாட்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு "நாங்கள் என்ன இரண்டாம் தரப்பினரா?" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆத்திரமடைந்து பதிலளிக்கின்றார்.

சர்வதேச நாடுகளிடம் கையேந்தும் போது இந்த இரண்டாம் தரப்பினரா என்ற நிலை ஏன் தோன்றவில்லை. அதே போல் போரை முடிவுக்குக் கொண்டு வருவற்கும், தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கும் உலக நாடுகளிடம் நிதி மற்றும் ஆயுதம் பெற கையேந்தும்போது இரண்டாம் தரப்பினரா என்ற எண்ணம் தோன்றவில்லையா?

நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினை என்ன? பிரச்சினையின் ஆணிவேர் என்ன? என்பதை அரச தலைவர்கள் ஆராயாமல் இருக்கும் வரை இந்த நாடு எவ்வாறு முன்னேற்றமடையும்? நாட்டின் சுகாதாரத்துறை பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இலவச சுகாதாரத்துறையில் எதிர்காலம் தொடர்பில் அரச மருத்துவ சங்கத்தினர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், அரசு எதிர்ப்பு அறிவிப்புக்களை மாத்திரம் வெளியிடுகின்றதே தவிர பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவில்லை.

கொழும்பில் உள்ள கனடா, பிரிட்டன் உட்பட சகல தூதுவராலயங்கள் மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகங்கள் முன்பாக இளைஞர்கள் நீண்ட வரிசையில் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எந்த நாட்டுக்காவது செல்ல வேண்டும் என்பதே இளைஞர்களின் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. தமிழர்கள் மட்டுமல்ல, சிங்களவர்களும், முஸ்லிம்களும் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள். குறிப்பாக, படித்த சமூகத்தினர் விரைவாக நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டோம், ஆசியாவின் ஆச்சரியம் என்று குறிப்பிட்டுக் கொண்டுவிட்டோம் என மார்தட்டிக்கொள்ளும் அரசு பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணவில்லை.

மாறாக, இந்து ஆலயங்களை அழித்து அங்கு விகாரைகளைக் கட்டுவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான மனநிலையில் எவ்வாறு முன்னேற முடியும்?

நாட்டின் தொழிற்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலான ஆடை தொழிற்சாலைகள் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளன. பொருளாதார மீட்சி என்று அரசு குறிப்பிடுகின்றது. ஆனால், நாட்டின் பொருளாதார நிபுணர்கள் கூட நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள்.

வங்குரோத்து நிலைக்கு மத்தியிலும் இனவாதச் செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. பௌத்த பிக்குகள் இனவாதத்தைப் பறைசாற்றி ஆவேசமாகச் செயற்படுகிறார்கள். இனவாதத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு செயற்பட்டால் எவர் ஆதரவு வழங்குவார்?

இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தமிழர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழர்களின் நிலைப்பாட்டுக்கு மதிப்பளித்து நீதியான தீர்வை வழங்கினால் சர்வதேசத்தில் சாதிக்கும் தமிழர்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள்." – என்றார்.

# மன்னார் அரச அதிபர் வெற்றிடத்துக்கு மதவாதமற்ற ஒருவரை நியமியுங்கள்

## ஜனாதிபதிக்கு சிவகரன் கடிதம்



(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட அரச அதிபர் வெற்றிடம் ஒரு மாதத்துக்கு மேலாக காணப்படுகின்ற நிலையில் உடனடியாக அரச அதிபர் ஒருவரை நியமிக்குமாறு கோரி மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மன்னார் மாவட்ட அரச அதிபர் வெற்றிடம் ஒரு மாதத்துக்கு மேலாகக் காணப்படுகின்றது. மாவட்டத்தில் பல்வேறு விதமான பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளன.

குறிப்பாக பெரும்போகம் விவசாய நடவடிக்கைகள் தொடங்கவுள்ளதால் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாகப் பல பிரச்சினைகள் காணப்படுவதுடன் மாவட்ட ரீதியாகவும் பல விடயங்களுக்குத் தீர்மானம் எடுப்பதில் பல்வேறு தாமதங்கள் ஏற்படுகின்றன.

கடந்த காலத்தைப் போல் அல்லாமல் வலிமையான, ஆளுமையுள்ள, செயல் திறனுள்ள, வல்லமையயுள்ள ஒருவரை மதவாதம், அடிப்படைவாதம், அரசியல் நோக்கு நிலை வாதம் கடந்து நிர்ணய நிலையில் உள்ள சமூக சம நீதியை பின்பற்றக்கூடிய ஒருவரை மிக மிக விரைவாக நியமிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் காணி விடுவிப்பு உட்பட அரசியல் தீர்மானங்கள் யாவும் எமது மாவட்டத்தில் ஒழுங்காக நிகழ்வதில்லை.

மிகப் பலவீனமான அரசியல் தலைவர்கள் உள்ளதால் நிர்வாகத் தலைமைக்காவது ஆளுமையுள்ள ஒருவரை நியமிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றுள்ளது.

### இணையப் பாதுகாப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரீதியான மறுசீரமைப்புக்களின்றி புதிய சட்டமூலத்தை நிறைவேற்றுவதென்பது நாட்டுமக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும், அதனுடன் தொடர்புடைய ஏனைய அடிப்படை உரிமைகளையும் பெரிதும் வலுவிழக்கச்செய்யும்."

- இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

உத்தேச நிகழ்நிலைக்காப்பு சட்டமூலம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.ரி.பி.தெஹிதெனியவினால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

கடந்த செப்டெம்பர் 18 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 'நிகழ்நிலைக் காப்பு' எனும் பெயரிலான சட்டமூலத்தை அடிப்படையாகக்கொண்டு இந்தக் கடிதத்தை எழுதுகின்றோம். அந்தச் சட்டமூலத்தை முழுமையாகப் பரிசீலித்த நாம், 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 (சி) பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆணையின் பிரகாரம் எமது அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம்.

இலங்கையின் நிகழ்நிலை இடைவெளியை (ஒன்லைன்) நாட்டின் பிரஜைகளுக்குப் பாதுகாப்பானதாக மாற்றியமைப்பதற்கு ஏற்றவாறான சட்டத்தை இயற்றுவது என்பது பெரிதும் வரவேற்கத்தக்க இலக்காகும்.

இருப்பினும் தற்போது நடைமுறையில் உள்ள நாட்டுமக்களின் நிகழ்நிலை நடவடிக்கைகள் தொடர்பில் பிரயோகிக்கப்படக்கூடிய குற்றவியல் சட்டத்தின் சில சரத்துக்களை பொருள்கோடல் செய்வதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க சவால்கள் இருப்பதை நாட்டின் சட்ட அமுலாக்க அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

அதற்கு மிகப்பொருத்தமான உதாரணமாக 2007 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் 3 ஆவது பிரிவைக் குறிப்பிடமுடியும். இந்தப் பிரிவானது நிகழ்நிலை மீறல்களை உரியவாறு கையாள்வதற்கு ஏதுவான வகையில் முழுமையாகப் பிரயோகிக்கப்படவில்லை.

அதேவேளை, சிலவேளைகளில் மீறலாகக் கருதப்படமுடியாத நிகழ்நிலை கருத்துக்களைத் தண்டிப்பதற்கு இப்பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் 3 ஆவது பிரிவு தொடர்பில் கடந்த 2019 ஆம் ஆண்டு எமது ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பொதுவான வழிகாட்டல்களை உங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

இப்பிரிவானது 'தொடர்ச்சித்தன்மை வாய்ந்ததும் உரியவாறானதுமான முறையில்' பிரயோகிக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டி சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன. எது எவ்வாறெனினும் நிகழ்நிலை நடவடிக்கைகள் தொடர்பில் இந்தச் சட்டம் தொடர்ந்தும் தவறான முறையில் பிரயோகிக்கப்பட்டுவருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

எனவே, இந்த விடயத்தில் ஏற்கனவே சில பொதுவான கரிசனைகள் காணப்படும் பின்னணியில், புதிய நிகழ்நிலைக்காப்பு சட்டமூலம் முன்மொழியப்பட்டுள்ள தருணம் குறித்து நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம். அதேபோன்று நிகழ்நிலை குற்றங்களைக் கையாள்வதற்கான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்பதாக, ஏற்கனவே உள்ள குற்றவியல் சட்டத்தை உரியவாறு பொருள்கோடல் செய்வதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் ஏதுவான வகையில் சட்ட அமுலாக்கத் தரப்பினரின் கட்டமைப்பு ரீதியான இயலுமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களின்றி புதிய சட்டமூலத்தை நிறைவேற்றுவதென்பது நாட்டுமக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும், அதனுடன் தொடர்புடைய ஏனைய அடிப்படை உரிமைகளையும் பெரிதும் வலுவிழக்கச் செய்யும்.

அதேவேளை, இந்தச் சட்டமூலம் தொடர்பான எமது அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளையும் இங்கு முன்வைக்கின்றோம். குறிப்பாக நபர் ஒருவரைத் துன்பத்துக்கு உள்ளாக்கக்கூடியவாறான கருத்துக்களைக் குற்றமாக வரையறை செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் 'துன்பம்' எனும் உணர்வின் அளவு வேறுபடக்கூடியது என்பதுடன் அது முற்றிலும் நபர் சார்ந்ததாகும். ஆகவே, அத்தகைய கருத்துக்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட (பாதிக்கப்பட்ட) நபர் சிவில் செயன்முறைமூலம் தனக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோன்று இச்சட்டமூலத்தில் முன்மொழியப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவுக்கான நியமனங்கள், அதன் அரசியல் சுயாதீனத்தன்மை குறித்த உத்தரவாதத்தை வழங்கக்கூடிய நியமன செயன்முறையொன்றின் ஊடாக மேற்கொள்ளப்படவேண்டும்.

மேலும், இச்சட்டமூலத்தில் குற்றமாகக் கருதப்படக்கூடிய 'தடைசெய்யப்பட்ட கருத்துக்கள்' என வரையறுக்கப்பட்டுள்ள பல விடயங்கள் ஏற்கனவே 1883 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்தப் புதிய சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ள அவ்வாறான விடயங்கள் நீக்கப்படவேண்டும் அல்லது அவற்றின் பொருத்தப்பாடுடைய தன்மை குறித்து மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அடுத்ததாக நிகழ்நிலை ஊடகப் பயனாளர்கள் அவர்களது அடையாளத்தை வெளிக்காட்டாமல் இருப்பதற்குக் கொண்டிருக்கும் சுதந்திரத்தைப் பாதுகாக்கக் கூடிய வகையில் 'நம்பகத்தன்மையற்ற நிகழ்நிலை கணக்குகள்' என்ற சொற்பதத்துக்கான தெளிவான வரையறை இந்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். அத்தோடு பொலிஸ் விசாரணைகளுக்கு உதவுவதற்காக நியமிக்கப்படும் நிபுணர்கள் பொதுமக்கள் சார்ந்த பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படாத தனியார்துறை சார்ந்தோராக இருக்கக்கூடும் என்பதால், அவர்களுக்குப் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது. - என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## படையினரின் ஆபத்பாந்தவர் ரணில்

பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்கிலும் மகாவம்ச மனவமைப்பிலும் புதைந்து கிடக்கும் இலங்கையின் அரசுகளிடமிருந்தோ அல்லது தலைவர்களிடமிருந்தோ எந்தச் சமயத்திலும் தமிழர்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்பது மட்டும் மீண்டும் மீண்டும் உறுதியாகி வருகின்றது.

பேரினவாதப் போக்கில் சற்றுத் தீவிரம் குறைந்தவரும், லிபரல் சிந்தனை உடையவரும், இன நல்லிணக்கத்திற்கு சார்பானவரும் என்று கருதப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு வந்து, அடுத்த ஒரு வருட காலத்துக்குள் காட்டி நிற்கும் கோர - கொடூர - முகம், ஈழத் தமிழர்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் ஒன்றுபட்ட நாட்டுக்குள் நீதி கிடைக்காது என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

ஜேர்மன் டொச்சவெலா செய்தி முகவர் அமைப்புக்குத் தாம் வழங்கிய காணொலிப் பேட்டியில் பதற்றத்துடனும், சீற்றத்துடனும், பாய்ந்து விழுந்தும் ரணில் விக்கிரமசிங்க அளித்த பதில்கள் அவரது உண்மை முகத்தைக் காட்டி நிற்கின்றன.

பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்குடைய தென்னிலங்கை மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த ராஜபக்ஷக்களில் முப்படைகள் மற்றும் பொலிஸ் மீது அதிக 'பிடி'யை வைத்திருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. ஜனாதிபதியான அவருக்கு எதிராக மக்கள் திரண்ட போது, முப்படைகளும் பொலிஸூம் கோட்டாபயவைக் கைவிட்டன. அதனால் மக்கள் எழுச்சிக்கு முகம் கொடுக்க முடியாத கோட்டாபய நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தார். அந்த விவகாரங்களில் உள்ளடங்கியிருந்த அரசியல் நுணுக்கங்களை - சூட்சுமங்களை - நன்கு புரிந்து கொண்ட அரசியல் நரித் தந்திரசாலியான ரணில் விக்கிரமசிங்க, அதற்கேற்ப இப்போது காய் நகர்த்துகின்றார்.

மக்கள ஆதரவு தமக்கு இருக்கின்றதோ, இல்லையோ, மக்களின் எதிர்ப்பு ஏதும் முன்னைய அறகலய போராட்டம் போன்று கிளர்ந்தாலும், அதை வெற்றிகரமாக அடக்கி, தாம் ஆட்சியில் தொடர்வதானால் தமக்கு முப்படைகள் மற்றும் பொலிஸின் முழு ஆதரவும் மிக மிக அவசியம் என்பதைப் புரிந்து கொண்டு, இலங்கைப் பாதுகாப்புத் தரப்பை சர்வதேசக் குற்றவியல் விசாரணைக் கெடுபிடிகளிலிருந்து காப்பதற்கு ராஜபக்ஷக்களை விடத் தாமே மிகப் பொருத்தமானவர் என்பதைப் படைத் தரப்புக்கும் படைத் தளபதிகளுக்கும் காட்ட விழைகின்றார் ரணில்.

இலங்கையில் நடைபெற்ற விவகாரங்களுக்கு சர்வதேச விசாரணை ஏதும் கிடையாது, எதுவும் உள்நாட்டில்தான் என்று பதற்றத்துடனும், சீற்றத்துடனும், பாய்ந்து விழுந்தும், அந்தப் பேட்டியில் அவர் கருத்து வெளியிட்டமையின் உள்ளாந்தம் அதுதான்.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் மற்றும் ஈஸ்டர் குண்டு தாக்குதல் போன்றவற்றுக்கு சர்வதேச சுயாதீன விசாரணைக்கு இடம் இல்லை என்று ஆக்ரோஷத்துடன் உரைப்பதன் மூலம் இலங்கைப் படைகளின் ஆபத்பாந்தவன் தாமே என்று காட்ட அவர் துடிக்கின்றார் என்பதை அந்தக் காணொலியைப் பார்த்த எவரும் புரிந்து கொள்வர்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கடந்த பதினைந்து வருடங்களாக உள்நாட்டில் முன்னெடுக்கப்படாத பக்க சார்பற்ற விசாரணை, பொறுப்பு கூறல் செயற்பாடு, உண்மையை அம்பலப்படுத்தும் நடவடிக்கை மற்றும் நீதியை நிலை நாட்டும் முயற்சி போன்றவை இவ்வளவுக்குப் பிறகும் உள்நாட்டில் நடக்கும் என்று கூறுவதன் மூலம் முழு உலகையுமே முட்டாளாக்குகின்றார் ரணில் விக்கிரமசிங்க. அதுதான் உண்மை.

## 6 மாதக் குழந்தை கொலை; தாயாருக்கு விளக்கமறியல்

மாத்தறை – ஊருபொக்க பகுதியில் 6 மாதக் குழந்தை கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட தாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுவருடன் மோதியதில் தலையில் காயமேற்பட்டது எனத் தெரிவித்து குழந்தை கடந்த 30 ஆம் திகதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. எனினும், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

குழந்தையின் உடலில் காயங்கள் காணப்பட்டதால், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு தாயைக் கைது செய்தனர்.

22 வயதான குறித்த பெண் மொரவக்க நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## மாத்தறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை

நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக மாத்தறை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் இன்றும், நாளையும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை மாத்தறை மாவட்ட செயலாளர் விடுத்துள்ளார்.

இந்த இரண்டு நாட்களுக்கான பாடத் திட்டங்களை வேறு நாட்களில் நடத்துவது குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கோண்டாவிலில் விபத்து இளம் குடும்பஸ்தர் சாவு!



வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த காரின் கதவு திடீரென திறக்கப்பட்ட நிலையில் வீதியால் மோட்டார் சைக்கிள் பயணித்தவர் மோதுண்டு விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதியில் கோண்டாவில் – உப்புமடம் சந்திப் பகுதியில் நேற்று இரவு 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த லோகராசா தர்சன் என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார். அவர் மேசன் தொழிலாளி என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த சுன்னாகம் பொலிஸார் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததுடன் விபத்துக்குக் காரணமான காரினை அங்கிருந்து எடுத்துச் செல்ல முற்பட்டபோது அப்பகுதியில் கூடியவர்கள் முரண்பட்டனர்.

உரிய விசாரணைகள் இடம்பெறாது சடலத்தை அப்புறப்படுத்தியதுடன் விபத்துக்குக் காரணமான காரினை பொலிஸார் எடுத்துச் செல்வதை அனுமதிக்க முடியாது என அவர்கள் தெரிவித்தனர். அதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

அதேவேளை, காரின் சாரதி பொலிஸில் சரணடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அண்ணாமலையை மாற்றுமாறு அ.தி.மு.க. கோரிக்கை வைத்ததா?

## - எடப்பாடி பழனிசாமி விளக்கம்



தமிழக பா.ஜ.கவின் மாநிலத் தலைவர் அண்ணாமலையை மாற்ற வேண்டும் என்று அ.தி.மு.க கோரிக்கை விடுத்தது என தெரிவிக்கப்படும் கருத்துகள் தவறானவை. நாங்கள் எந்த கோரிக் கையும் வைக்கவில்லை என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் எடப்பாடியில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம், பாஜக கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியேறிவிட்டது. பா.ஜ.க. நிர்வாகிகள் அ.தி.மு.கவில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே, அதை மறுபரிசீலனை செய்வீர்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், அது அவர்களின் விருப்பம். ஏற்கெனவே நான் தெளிவுபடுத்திவிட்டேன். சேலம் மாநகர், மாவட்ட பூத் கமிட்டி நிகழ்ச்சியிலேயே நான் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறேன்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டச் செயலா ளர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், இரண்டு கோடி தொண்டர்களின் உணர்வு களை அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனடிப்படையில், ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. விலகிக் கொள்கிறது என்றும், தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானத்தின் அடிப்படையில், அ.தி.மு.க. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகிவிட்டது என்று தெரிவித்தார்.

அத்துடன், 2026 சட்டமன்றத் தேர்தலில் அண்ணாமலையை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க பா.ஜ.க. அழுத்தம் கொடுத்ததால்தான் அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து வெளியேறியதா? என்ற கேள்விக்கு பதிலளித்த எடப்பாடி பழனிசாமி , அது தவறான செய்தி. எங்கள் கட்சியைச் சேர்ந்த கே.பி.முனுசாமி, அது தவறான செய்தி என்று ஏற்கெனவே கூறிவிட்டார். அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை.

பா.ஜ.கவில் மத்தியில் உள்ள தலைவர்கள், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தேசிய தலைவர் ஜே.பி. நட்டா மற்றும் பிரதமர் மோடி உட்பட யாரும் எங்களுக்கு எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை.

ஆனால், தமிழகத்தில் நடந்த நிகழ்வுகள் அ.தி.மு.க. தொண்டர்களின் மனதை காயப்படுத்திவிட்டது. ஒரு கட்சி வளமாக செழிப்பாக தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்றால் தொண்டர்கள் உழைக்க வேண்டும். அவர்கள் உழைத்தால்தான் வெற்றி பெற முடியும். தலைவர்களை மட்டும் வைத்துக்கொண்டு கட்சி நடத்த முடியாது.

எனவே, எங்களது தொண்டர்களின் உணர்வுகளை மதித்துத்தான் நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம். பா.ஜ.க. சார்பில் இடங்கள் ஒதுக்கீடு குறித்தும் பேசவில்லை.

ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளியாகும் இதுதொடர் பான செய்திகள் தவறானவை. பா.ஜ.க வுக்கு 20 இடங்கள் வேண்டும், 15 இடங்கள் வேண்டும் என்றெல்லாம் அவர்கள் எந்த கோரிக்கையும் வைக்கவும் இல்லை. அதுகுறித்து பேசவும் இல்லை.

அதேபோல, தமிழக பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் அண்ணாமலையை மாற்ற வேண்டும் என்ற அ.தி.மு.க. கூறியது என தெரிவிக்கப்படும் கருத்துகளும் தவறானது. நாங்கள் எந்த கோரிக்கையும் வைக்கவில்லை. அ.தி.மு.க. தொண்டர்களின் விருப்பத்தின் அடிப்படையில் கூட்டணியில் இருந்து நாங்கள் வெளியேறினோம் என்று தெரிவித்துள்ளார்.

# அண்ணாமலையின் நடைபயணம் ஒத்திவைப்பு!



நாளைய தினம் ஆரம்பமாகவிருந்த பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலையின் ‘என் மண் என் மக்கள்’ நடைபயணம், எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என அந்த கட்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக பாரதிய ஜனதா கட்சியின் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மாநிலத் தலைவர் அண்ணாமலையின் என் மண் என் மக்கள் பாத யாத்திரை, எதிர்வரும் 6 ஆம் திகதி தொடங்கவிருந்த நிலையில், மாநிலத் தலைவருக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. இன்று திட்டமிட்டப்படி மாவட்டத் தலைவர்கள் கூட்டம் நடைபெறும். திருத்தப்பட்ட நடைபயண பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்று பதிவிடப்பட்டுள்ளது.


அத்துடன், அண்ணாமலை உடல்நிலை தொடர்பாக, தனியார் மருத்துவமனை வெளியிட்டுள்ள மருத்துவ அறிக்கை ஒன்று இணைக்கப்பட்டிருந்தது. அதில், அண்ணாமலை இருமல், மூச்சு விடுவதில் சிரமம், தொண்டை வலி, உடல் வலியால் பாதிக்கப்பட்டுள்ளார்.

எனவே, அண்ணாமலை மேலும் இரண்டு வாரங்கள் ஓய்வெடுக்க மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் இறுதியில், கோவையில் தொடங்கவிருந்த என் மண் என் மக்கள் பாதயாத்திரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தற்போது அண்ணாமலையின் உடல்நலக் குறைவு காரணமாக மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க விஞ்ஞானிகள் மூவருக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு!




வேதியியலுக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மவுங்கி பவெண்டி உள்பட மூவர் இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சுவீடனைச் சேர்ந்த ஆய்வாளர் ஆல்பிரட் நோபல் நினைவாக மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய ஆறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அல்பிரட் நோபலின் நினைவு தினமான டிசம்பர் 10 ஆன் திகதி இந்த பரிசுகள் வழங்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுகள் குறித்த அறிவிப்பு கடந்த திங்கள் கிழமை தொடங்கியது. திங்கள் கிழமை மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இயற்பிய லுக்கான பரிசு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. மூன்றாம் நாளான நேற்று வேதியியலுக்கான பரிசு அறிவிக் கப்பட்டுள்ளது .

பிரான்சின் பாரிஸ் நகரில் பிறந்து அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில் நுட்ப கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றும் மவுங்கி பவெண்டி, அமெரிக்காவின் கிளவ்லேண்டு நகரில் பிறந்து நியூயார்க்கின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றும் லூயிஸ் புரூஸ், ரஷ்யாவில் பிறந்து அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள நானோகிரிஸ்டல்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் தலைமை விஞ்ஞானியாக பணியாற்றிய அலெக்சி எகிமோவ் ஆகியோர் வேதியியலுக்கான நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட் டுள்ளனர்.

குவாண்டம் புள்ளிகளை கண்டறிந்து தொகுத்ததற்காக அவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களது கண்டுபிடிப்புதான் எல்.இ.டி.-க்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

குவாண்டம் புள்ளிகள் மனித குலத்திற்கு மிகப் பெரிய பயனைத் தருகின்றன. எதிர்காலத்தில் அவை நெகிழ்வான எலக்ட்ரானிக்ஸ், சிறிய சென்சார்கள், மெல்லிய சூரிய மின்கலங்கள் மற்றும் தகவல்தொடர்புக்கு பங்களிக்கக்கூடும் என்று ஆராய்ச்சியா ளர்கள் நம்புகிறார்கள்.

# பேங்கொக் வணிக வளாகத்தில் துப்பாக்கிச் சூடு: சிறுவன் கைது



பேங்கொக் வணிக வளாகமொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்பில் 14 வயது சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டினால் இருவர் உயிரிழந்துள்ளனர். ஐவர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்த இருவரும் சீனா மற்றும் மியன்மார் பிரஜைகள் என தாய்லாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வணிக வளாகத்திற்கு அருகாமையிலுள்ள பாடசாலை ஒன்றில் அந்த சிறுவன் கல்வி கற்கின்றார் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலை மேற்கொண்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

# அமெரிக்க சபாநாயகர் பதவி நீக்கம்!



அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகரான கெவின் மெக்கார்த்தி அவரது பதவியில் இருந்து நீக்கப்பட் டுள்ளார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த கெவின் மெக்கார்த்தி மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியைத் தழுவியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் ஒருவர் இவ்வாறு பதவி நீக்கப்படுவது இதுவே முதல் முறை என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பதவியில் இருந்து நீக்கப்பட்ட கெவின் மெக்கார்த்தி, மீண்டும் சபாநாயகர் பதவிக்கு போட்டியிட விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் சமர்

# அஹமதாபாத்தில் இன்று ஆரம்பம்

ஐ.சி.சியின் 13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இன்று பிற்பகல் 2 மணிக்கு, இந்தியாவின் அஹமதாபாத் நகரில் ஆரம்பமாகவுள்ளது. முதலாவது ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் இங்கிலாந்தை எதிர்த்து நியூஸிலாந்து அணி களமிறங்கவுள்ளது.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர், இம்முறை இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இத்தொடர் இன்று (ஒக்டோபர் – 5) தொடங்கி எதிர்வரும் நவம்பர் 19ஆம் திகதியுடன் நிறைவுபெறும்.

இத்தொடரில் 10 அணிகள் பங்கேற்கவுள்ளன.

அதன்படி,

ஆப்கானிஸ்தான்
அவுஸ்திரேலியா
பங்களாதேஷ்
இங்கிலாந்து
இந்தியா
நெதர்லாந்து
நியூஸிலாந்து
பாகிஸ்தான்
தென்னாபிரிக்கா
இலங்கை

ஆகிய அணிகள் இத்தொடரில் பங்கேற்கவுள்ளன.

இத்தொடரில் பங்கேற்கும் அணிகள், ஏனைய அணிகளுடன் தலா ஒரு போட்டியில் மோதிக்கொள்ளும்.

பின்னர், முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதியாட்டங்களுக்குத் தகுதிபெறும்.

அதன்படி முதல் லீக் சுற்றுப் போட்டிகளின் அடிப்படையில் முதலாவது இடம் மற்றும் நான்காவது இடம் பிடிக்கும் அணிகள் முதலாவது அரையிறுதியிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடிக்கும் அணிகள் இரண்டாவது அரையிறுதியிலும் மோதும்.

இரு அரையிறுதியாட்டங்களிலும் வெற்றிபெறும் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெறும்.

இத்தொடரை நடத்தும் அணி என்ற அடிப்படையில் இம்முறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய சந்தர்ப்பம் இந்தியாவுக்கே அதிகம் உள்ளது. அதேவேளை, அந்த அணி தற்போதைய நிலையில் பலமான அணியாகவே உள்ளது என்பது கண்கூடு.

அதேவேளை, இத்தொடர் நடைபெறும் பருவகாலம் மழை காலம் என்பதால் பலமான அணிகளுக்குச் சரிவையும், பலமில்லாத அணிகள் முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்பாகவும் அமையக்கூடும்.

இதற்கிடையில் வழமையாக அனைத்து உலகக் கிண்ணத் தொடர்களிலும் பங்கேற்று வந்த – ஜாம்பவான்கள் பலர் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி இம்முறை தகுதிபெறாமல் போனமை துரதிர்ஷ்டமே.

எது எப்படியோ இம்முறை எந்த அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றப்போகிறது என்பதைக் கணிப்பது கடினமானதாகவே இருக்கின்றது.



# உலகக் கிண்ணக் கிரிக்கெட்டும் கடந்தகால சம்பியன்களும்




கிரிக்கெட் ஆரம்பித்தது என்னவோ இங்கிலாந்தில்தான், ஆனால், அந்தக் கிரிக்கெட்டை ஆரம்ப காலத்தில் ஆட்சிசெய்துகொண்டிருநதவர்கள் மேற்கிந்தியர்கள்தான்.

கிரிக்கெட்டில் நடந்த உலகக் கிண்ணத் தொடர்கள் அவற்றுக்குச் சான்றாகும்.

அதில் இன்னொரு முக்கிய விடயம், கடைசியாக நடந்த (2019) உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில்தான் இங்கிலாந்தால் சம்பியன் பட்டத்தையே நுகர முடிந்தது.

இதன்படி இதுவரை நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்கள் குறித்து சிறிது பார்ப்போம்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் ஆரம்ப (1975, 79) இரு சம்பியன் கிண்ணங்களை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியிருந்தது.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது தொடரை ஆசிய அணியான இந்தியா கைப்பற்ற, 1987இல் நடந்த நான்காவது தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாவது தொடர் மற்றொரு ஆசிய அணியான பாகிஸ்தான் வசம் செல்ல, 1996ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது தொடரை அதே ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த இலங்கை கைப்பற்றியது.

பின்னர் நடந்த மூன்று தொடர்களை (1999, 2003, 2007) தொடர்ந்து அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

இந்தக் காலகட்டத்தில் அவுஸ்திரேலியாவின் ஆதிக்கம் பல மடங்கு மேலோங்கியிருந்தது.

அவுஸ்திரேலியாவின் அந்த ஆதிக்கத்துக்கு 2011 இல் இந்தியா முற்றுப்புள்ளி வைத்தது. பின்னர் 2015இல் மீண்டும் அவுஸ்திரேலியாவின் கையோங்க 11ஆவது உலகக் கிண்ணத்தை அந்த அணி கைப்பற்றியது.

கடைசியாக 2019ஆம் ஆண்டு நடைபெற்ற 12ஆவது தொடரை, அதுவரை உலகக் கிண்ணக் கனவுடன் கிரிக்கெட் ஆடிவந்த இங்கிலாந்து அணி கைப்பற்றியது.

இதுவரை நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடர்களின் அடிப்படையில், அவுஸ்திரேலியா 5 தடவைகள் சம்பியனாகி தனது இடத்தை ஆழமாகப் பதிந்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இந்திய அணிகள் தலா இரு தடவைகள் சம்பியனாகி இரண்டாவது இடத்தில் உள்ளன.

பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து அணிகள் தலா ஒரு தடவை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி மூன்றாவது இடத்தில் உள்ளன.

இந்நிலையில், இம்முறை 13ஆவது உலகக் கிண்ணத் தொடர் இன்று ஆரம்பித்துள்ளது.

எந்த அணி இக்கிண்ணத்தைக் கைப்பற்றப் போகிறது என்பதை அவரவர் ஆட்டங்களே தீர்மானிப்பவையாக அமையும்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் சம்பியன்கள் 1975-2019



# கிரிக்கெட் உலகக் கிண்ணம்-2023 போட்டி அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| Thursday, 5 October | ENGLAND | v | NEW ZEALAND | Ahmedabad |
| Friday, 6 October | PAKISTAN | v | NETHERLANDS | Hyderabad |
| Saturday, 7 October ☀ | BANGLADESH | v | AFGHANISTAN | Dharamsala |
| Saturday, 7 October | SOUTH AFRICA | v | SRI LANKA | Delhi |
| Sunday, 8 October | INDIA | v | AUSTRALIA | Chennai |
| Monday, 9 October | NEW ZEALAND | v | NETHERLANDS | Hyderabad |
| Tuesday, 10 October ☀ | ENGLAND | v | BANGLADESH | Dharamsala |
| Tuesday, 10 October | PAKISTAN | v | SRI LANKA | Hyderabad |
| Wednesday, 11 October | INDIA | v | AFGHANISTAN | Delhi |
| Thursday, 12 October | AUSTRALIA | v | SOUTH AFRICA | Lucknow |
| Friday, 13 October | NEW ZEALAND | v | BANGLADESH | Chennai |
| Saturday, 14 October | INDIA | v | PAKISTAN | Ahmedabad |
| Sunday, 15 October | ENGLAND | v | AFGHANISTAN | Delhi |
| Monday, 16 October | AUSTRALIA | v | SRI LANKA | Lucknow |
| Tuesday, 17 October | SOUTH AFRICA | v | NETHERLANDS | Dharamsala |
| Wednesday, 18 October | NEW ZEALAND | v | AFGHANISTAN | Chennai |
| Thursday, 19 October | INDIA | v | BANGLADESH | Pune |
| Friday, 20 October | AUSTRALIA | v | PAKISTAN | Bengaluru |
| Saturday, 21 October ☀ | NETHERLANDS | v | SRI LANKA | Lucknow |
| Saturday, 21 October | ENGLAND | v | SOUTH AFRICA | Mumbai |
| Sunday, 22 October | INDIA | v | NEW ZEALAND | Dharamsala |
| Monday, 23 October | PAKISTAN | v | AFGHANISTAN | Chennai |
| Tuesday, 24 October | SOUTH AFRICA | v | BANGLADESH | Mumbai |
| Wednesday, 25 October | AUSTRALIA | v | NETHERLANDS | Delhi |
| Thursday, 26 October | ENGLAND | v | SRI LANKA | Bengaluru |
| Friday, 27 October | PAKISTAN | v | SOUTH AFRICA | Chennai |
| Saturday, 28 October ☀ | AUSTRALIA | v | NEW ZEALAND | Dharamsala |
| Saturday, 28 October | NETHERLANDS | v | BANGLADESH | Kolkata |
| Sunday, 29 October | INDIA | v | ENGLAND | Lucknow |
| Monday, 30 October | AFGHANISTAN | v | SRI LANKA | Pune |
| Tuesday, 31 October | PAKISTAN | v | BANGLADESH | Kolkata |
| Wednesday, 1 November | NEW ZEALAND | v | SOUTH AFRICA | Pune |
| Thursday, 2 November | INDIA | v | SRI LANKA | Mumbai |
| Friday, 3 November | NETHERLANDS | v | AFGHANISTAN | Lucknow |
| Saturday, 4 November ☀ | NEW ZEALAND | v | PAKISTAN | Bengaluru |
| Saturday, 4 November | ENGLAND | v | AUSTRALIA | Ahmedabad |
| Sunday, 5 November | INDIA | v | SOUTH AFRICA | Kolkata |
| Monday, 6 November | BANGLADESH | v | SRI LANKA | Delhi |
| Tuesday, 7 November | AUSTRALIA | v | AFGHANISTAN | Mumbai |
| Wednesday, 8 November | ENGLAND | v | NETHERLANDS | Pune |
| Thursday, 9 November | NEW ZEALAND | v | SRI LANKA | Bengaluru |
| Friday, 10 November | SOUTH AFRICA | v | AFGHANISTAN | Ahmedabad |
| Saturday, 11 November ☀ | AUSTRALIA | v | BANGLADESH | Pune |
| Saturday, 11 November | ENGLAND | v | PAKISTAN | Kolkata |
| Sunday, 12 November | INDIA | v | NETHERLANDS | Bengaluru |
| Wednesday, 15 November | SEMI FINAL 1 | | | Mumbai |
| Thursday, 16 November | SEMI FINAL 2 | | | Kolkata |
| SUNDAY, 19 NOVEMBER | FINAL | | | AHMEDABAD |

ALL DAY-NIGHT MATCHES BEGIN AT 14h00 LOCAL TIME
☀ DAY MATCHES BEGIN AT 10h30 LOCAL TIME

# இலங்கை அணி பங்கேற்கும் போட்டிகள்

7 OCTOBER 2023, DELHI
v SOUTH AFRICA

12 OCTOBER 2023, HYDERABAD
v PAKISTAN

16 OCTOBER 2023, LUCKNOW
v AUSTRALIA

21 OCTOBER 2023, LUCKNOW ☀
v NETHERLANDS

26 OCTOBER 2023, BENGALURU
v ENGLAND

30 OCTOBER 2023, PUNE
v AFGHANISTAN

2 NOVEMBER 2023, MUMBAI
v INDIA

6 NOVEMBER 2023, DELHI
v BANGLADESH

9 NOVEMBER 2023, BENGALURU
v NEW ZEALAND



ALL DAY-NIGHT MATCHES BEGIN AT 14h00 LOCAL TIME
☀ DAY MATCHES BEGIN AT 10h30 LOCAL TIME

## மக்கள் ஆணையில்லாத ஜனாதிபதியால்

# சர்வதேச விசாரணையை நிராகரிக்கவே முடியாது!

### முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவிப்பு

மக்கள் ஆணையில்லாத ஜனாதிபதியால் சர்வதேச விசாரணையை நிராகரிக்க முடியாது என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“சர்வதேச விசாரணை தொடர்பான ஜரேமன் ஊடகம் ஒன்றுக்கான நேர்காணலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் ஆவேசப்பட்டு கொதிப்படைந்த நிலையில் பதில் வழங்கியதைக் காணமுடிந்தது.

சர்வதேச விசாரணையை நடத்த முடியாது எனவும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களைத் தான் நிராகரிக்கின்றார் எனவும், அந்தத் தீர்மானங்களை இலங்கை ஏற்றுக் கொள்ளவில்லை எனவும், தன்னை ஆட்சிக்குக் கொண்டு வந்து அழகு பார்க்கும் தரப்பு மேற்குலகம் இல்லை எனவும் மக்களை ஏமாற்றும் வகையில் மிகவும் கடும் தொனியில் ஜனாதிபதி பதில் வழங்கியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசில் பிரதமராகப் பதவி வகித்த போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை ஏற்று கால நீடிப்பு பெற்றதை மறந்து விட்டாரா?



அல்லது ராஜபக்ச அரசின் ஜனாதிபதியாக இருப்பதால் நிராகரிப்பதாகக் கூறுகின்றாரா? என்ற குழப்பம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

நாட்டை முன்னேற்றுவதாக வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் வார்த்தை ஜாலங்களால் கதையளக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சக்கள் தமது ஆட்சியில் நடந்த முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைக்கு அஞ்சி தொடர்ந்து நிராகரித்த சர்வதேச விசாரணை மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளவில்லையெனில் ஜனாதிபதி நாட்டை முன்னேற்றவில்லை என்பதும், ராஜபக்சக்களை காப்பாற்ற முனைகின்றார் என்ற உண்மையும் அம்பலமாகியுள்ளது.

இலங்கைத் தீவு எதிர்காலத்தில் பொருளாதார ரீதியான நிலையான வளர்ச்சியை அடைய வேண்டுமாயின் பூகோள நாடுகளின் அரசியல் சதுரங்க ஆட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன் சுயாதீன சர்வதேச விசாரணை பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நடத்தப்பட்டு பரிகார நீதி வழங்கப்பட வேண்டும். இதனை மேற்கொள்ளாமல் ரணில் அல்ல எவர் ஜனாதிபதிக் கதிரைக்கு வந்தாலும் நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்ல முடியாது.

சர்வதேச விசாரணை என்பது பாதிக்கப்பட்ட மக்களின் தொடர்ச்சியான கோரிக்கை. அதனை ஜனாதிபதி ரணில் அரசு நிராகரிக்க முடியாது. காரணம் மக்கள் ஆணை இழந்த நாடாளுமன்றத்தை வழிநடத்தும் மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார்.” – என்றார்.

# தரம் உயர்த்தப்பட்ட வைத்தியசாலை உத்தியோகபூர்வமாக நேற்று திறப்பு





**- நூருல் ஹுதா உமர் -**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சம்மாந்துறை செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவு பிரதேச வைத்தியசாலையாக சுகாதார அமைச்சால் தரம் உயர்த்தப்பட்டமைக்கமைவாக இவ்வைத்தியசாலையை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சரசி பிரார்த்தனா விஜயசூரிய தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் கௌரவ அதிதியாகவும், பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும், கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டாக்டர் எம்.ஏ.நபீல், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் வை.பீ.ஏ.அஸீஸ் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது வைத்தியசாலைக்குத் தேவையான அம்புலன்ஸ் வாகனம் மற்றும் தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 50 அடி பள்ளத்தில் வீழ்ந்தது லொறி 22 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு







(மஸ்கெலியா நிருபர் செ.தி. பெருமாள்)

மஸ்கெலியாவில் சிறிய லொறியொன்று 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

மரண வீடொன்றின் இறுதிச் சடங்கில் பங்கேற்றத் தோட்டத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற லொறியே விபத்துக்குள்ளானது என்று மஸ்கெலியா போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 9.00 மணியளவில் மஸ்கெலியா – சாமிமலை பிரதான வீதியில் பிரவுன்ஸ்விக் தோட்டப் பகுதியில் இடம்பெற்றது.

விபத்தில் சாரதி உட்பட 22 பேர் காயமடைந்தனர். இவர்களில் ஆண் ஒருவரும், நான்கு பெண்களும் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சாரதி உட்பட 17 பேர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். இவர்களில் பலத்த காயங்களுக்குள்ளான மூவர் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் கண்டி போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த சிறிய லொறியின் அளவைவிட அதிகமான ஆட்களை ஏற்றிச் சென்ற காரணத்தால் லொறி கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்துள்ளது எனவும், விபத்தில் லொறி பலத்த சேதமடைந்துள்ளது எனவும் மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.






# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உவைஸ் திடீர் இராஜினாமா

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ், அந்தப் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் பதவி விலகினார் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கிடையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக வெளிநாட்டு எரிபொருள் நிறுவனம் ஒன்றின் ஆலோசகராகப் பணிபுரியும் ஒருவரை நியமிக்க எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தயாராகி வருகின்றார் என்று பெற்றோலிய தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.





# செட்டிகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய சிலைகள் விஷமிகளால் பெயர்த்தெடுப்பு!

## பொலிஸ் முறைப்பாட்டையடுத்து தீவிர விசாரணை

**- கே.வசந்தரூபன் -**

வவுனியா, செட்டிகுளம் வீரபும் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் சிலைகள் விஷமிகளால் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் நவக்கிரக விக்கிரகங்கள் மற்றும் வைரவர், முருகன், அம்மன் விக்கிரகங்கள் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை ஆலயத்துக்குப் பூஜைக்காகச் சென்ற ஆலயத்தின் குருக்கள் சிலைக்கள் சேதமாக்கப்பட்டமையை அவதானித்தவுடன் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவித்தார். பின் நிர்வாகத்தினரால் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.











# லிட்ரோ எரிவாயுவின் விலை திடீர் உயர்வு!

## பாவனையாளர்கள் கடும் விசனம்

லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 343 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, புதிய விலை 3 ஆயிரத்து 470 ரூபாவாகும்.

அத்துடன், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 137 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு ஆயிரத்து 393 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 63 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அதன் புதிய விலை 650 ரூபாவாகும்.

இந்த விலையேற்றம் தொடர்பில் லிட்ரோ சமையல் எரிவாயு பாவனையாளர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

# தங்க மகனுக்கு வரவேற்பு



(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாண மட்ட பாடசாலை விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் தங்கப்பதக்கம் வென்ற சம்மாந்துறை அல் முனீர் வித்தியாலய மாணவன் யூ.எல்.எம்.சஜாத், நேற்று (4) ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பாராட்டப்பட்டுள்ளார்.

பாடசாலை அதிபர் ஏ.அப்துல் ஜப்பார் தலைமையில் ஊர்வலம் இடம்பெற்று, சம்மாந்துறை வலய கல்விப் பணிமனையைச் சென்றடைந்தது.

அங்கு வலயக் கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா சாதனை மாணவன் சஜாத்துக்கு மலர் மாலை சூட்டி தங்கப்பதக்கம் அணிவித்து வரவேற்றார் .

கூடவே பிரதி கல்வி பணிப்பாளர்களான திருமதி நிதர்ஷினி மகேந்திரகுமார், யாஸீன் அரபாத் மொகைதீன், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.நசீர் (உடற்கல்வி), வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

16 வயதுக்குட்பட்ட ஈட்டியெறிதல் போட்டியில் 44.14 மீற்றர் தூரத்துக்கு எறிந்து முதலிடம் பெற்ற சஜாத், தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# லாவ் எரிவாயுவின் விலையும் உயர்வு

லாவ் சமையல் எரிவாயுவின் விலையும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 5 கிலோகிராம் லாவ் சமையல் எரிவாயுவின் விலை 60 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை ஆயிரத்து 595 ரூபாவாகும்.

அத்துடன், 12.5 கிலோகிராம் லாவ் சமையல் எரிவாயுவின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 3 ஆயிரத்து 985 ரூபாவாகும்.





**புதிய மாணவர் அனுமதி - 2023 செப்டம்பர் நுழைவு**

## UNDERGRADUATE DEGREE PROGRAMMES
## COMPUTING | BUSINESS

**SLIIT NORTHERN UNI** யின் நான்கு வருட பட்டப்படிப்புகள்.
தற்போது யாழ்ப்பாணத்தில்,
கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

**25% இற்கும் மேலான புலமை பரிசில்கள்**

**நினைவில் கொள்ள வேண்டிய திகதி**

விண்ணப்ப முடிவுத்திகதி
**5 OCT 2023**

தகுதிகாண் பரீட்சை
**7 OCT 2023**
( 10:30மு.ப to 11:30மு.ப)

மொழி மூலம்
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

NORTHERN UNI
Call us now: 077 147 1471
northernuni.lk
apply@northernuni.com

# AARI WORK, SAREE BLOUSE AND SHALWAR வகுப்புகளுக்கு

## புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும்


இலங்கையில் பிரசித்திபெற்ற
தையல் கலைஞர்
**Shamala Jayaratnam**
அவர்களால்
**October மற்றும் November**
மாதங்களில்
**Aari work**
**Saree Blouse**
**Shalwar**
வகுப்புகள் கனடாவில்
நடாத்தப்படவுள்ளன.














வகுப்பில் இணைய விரும்புபவர்கள்
முன்பதிவுகளை மேற்கொள்வதற்கும்
மேலதிக விபரங்களை அறிந்துகொள்
வதற்கும்

**Whatsapp**
**+1 (647) 856-6080**

Chinese Cultural Centre Of Greater Toronto
(Parking Lot Entrance via Progress Ave)
5183 Sheppard Ave E, Scarborough
Ontario - M1B 5Z5

# இன்றைய ராசி பலன்கள் - 05.10.2023




இன்று உங்கள் விருப்பத்திற்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்ததுபோல உணர்வீர்கள்.

கடினஉழைப்பும்அர்ப்பணிப்பும்உங்களுக்குவெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். காரணமேயில்லாமல் அவர்கள் உங்கள் மீது பழி போடுவார்கள். இது உங்கள் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற தவறான புரிந்துணர்வு கொள்வீர்கள். இதனை மாற்றிக் கொள்வது சிறந்தது.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும் அதிர்ஷ்டமும் குறைந்து காணப்படும். எனவே உங்கள் செலவுகளை முறையாக திட்டமிட்டு செய்யவும்.

அதிக வெப்பம் காரணமாக தோலில் எரிச்சல் ஏற்படும். இதனால் அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் நல்ல மன நிலையில் காணப்படுவீர்கள். நல்லது நடக்கும் என்ற உணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இந்தப் போக்கு உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களுக்கு ஊக்கத்தொகை போன்ற வகையில் கூடுதல் பணம் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அமைதியின்மை காரணமாக உங்களிடம் உறுதியும் தைரியமும் குறைந்து காணப்படும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்கள் இலக்குகளை அடிய நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் பணயில் சிக்கல்கள் காணப்படும் என்பதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். இது மேலதிகாரிகளின் கவனத்திற்கு செல்ல வாய்ப்பிருப்பதால் கவனம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனால் இடைவெளி உண்டாகும். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணாப்படும். பணம் இன்று குறைவாக இருபதால் நீங்கள் முறையாக திட்டமிட இயலாது.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். எனவே இன்று சகஜமாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்களிடம் நிறைய எதிர்பார்ப்பார்கள். என்றாலும் சில கட்டுப்பாடுகள் காரணமாக நீங்கள் உங்கள் இலட்சியத்தை அடைய இயலாது.

உங்கள் துணை உங்கள் அன்பை சரியாக புரிந்து கொள்ள மாட்டார். நீங்கள் உங்கள் அன்பில் நேர்மையாக இருந்தாலும் அதனை உங்கள் துணை சரியாக புரிந்து கொள்ள மாட்டார்.

இன்று உங்களால் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. எனவே சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கடன் வாங்குவதற்கான சாத்தியம் உள்ளது.




இன்றைய நாள் கடினமாக இருக்கும். உங்களிடம் பதட்டம் காணப்படும். பிரார்தனை மற்றும் வழிபாடு சிறந்த பயனளிக்கும்.

பணிகள் அதிகமாகவும் நேரம் குறைவாகவும் காணப்படும். இதனால் உங்களுக்கு பதட்டம் உண்டாகும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தேவையற்ற சண்டைகள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் தடுக்க அவருடன் அனுசரித்து செல்வது சிறந்தது.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் லட்சியம் அவ்வளவு எளிதானதல்ல. பணம் வந்தாலும் தேவையற்ற செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை பராமரிக்க இயலாது.

பதட்டம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.10.2023




நீங்கள் இன்று விரைந்து பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் மேற்கொள்வீர்கள். உங்கள் இலக்குகளை அடைந்து திருப்தியடைவீர்கள்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். இதன் மூலம் பணியில் சாதிப்பீர்கள்.

இன்று பக்குவமும் புரிந்துணர்வும் கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் முயற்சி காரணமாக இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

பக்தியும் பிரார்த்தனையும் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும். இதனால் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சில பிரச்சினைகளை சந்திக்க நேரும் என்பதால் பொறுமையும் மன உறுதியும் அவசியம். சிக்கலான சூழ்நிலையை சமாளிக்க நேர்மறையான எண்ணங்கள் அவசியம்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் நல்லுறவு பராமரிக்க முடியாது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறிது குழப்பம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்ல மன நிலையும் புரிந்துணர்வும் காணப்படும்.

இன்றி நிதிநிலை சாதகமாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவுகள் காரணமாக நீங்கள் கடன் வாங்க நேரலாம். மனக் குழப்பம் காரணமாக ஆரோக்கியக் குறைபாடு காணப்படும்.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப் படுவார்கள்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park